பாடம் - 12

# தேவனுடைய தெய்வீகத் திட்டம்

# மனித ஆத்துமா பாகம்- 2



# THE HUMAN SOUL PART - 2

For Further Details : E-Mail us : baskar_harvest@yahoo.co.in, baskarharvest@gmail.com
Phone : 97886 19229, 93641 50005

# மனித ஆத்துமா பாகம்-2




கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதர சகோதரிகளே, கடந்த பாடத்தில் நமக்கு மிகவும் வியப்பளிக்கத்தக்கவகையில் மனித ஆத்துமா என்பது மனிதனுக்குள் இருக்கும் வஸ்து அல்லது பொருள் அல்ல, மாறாக உயிருள்ள மனிதனே அந்த ஆத்துமா என தேவனுடைய வசனத்தில் மிகவும் விவரமாக அறிந்தோம். மேலும் மரித்த அனைவரும் இறந்த ஆத்துமாக்களாக மீண்டும் உயிர்த்தெழுதல்வரை கல்லறையில் ஒன்றும் அறியாத நிலையில் இருக்கவேண்டும். பின்பு கர்த்தர் இயேசுவின் இராஜ்யம் வரும்போது, அனைத்து மனிதர்களும் மீண்டும் உயிரடைவார்கள் என்று பார்த்தோம்.

ஆனால் சில நேரங்களில் மரித்தவர்கள் மீண்டும் தங்களை சந்தித்ததாகவும், வீட்டிற்குத் திரும்பி வருவதாகவும், உணவு மற்றும் உடை கேட்பதாகவும் கூறுகின்றனர். இதுபற்றி பரிசுத்த வேதாகமம் என்ன கூறுகின்றது? என்று பார்ப்போம்.

வேதத்திலும் சில இடங்களில் மரித்தவர்கள் ஏற்கனவே வந்ததாக சில வசனங்கள் உள்ளதைக் குறித்து ஆராய்ச்சி செய்வது நமது தலையாய கடமையாகும். மேலெழுந்தவாரியாக நாம் படித்தால் நமக்கு அவ்வாறே தோன்றும். அதனால்,

**ஏசாயா 34:16ல், "கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்"** என்று தேவன் கூறுகிறாரே. இப்போது பாடத்திற்கு செல்வோம்.

## 1. இறந்த தீர்க்கதரிசி சாமுயேலுடன் அஞ்சனக்காரி பேசுதல்



**1சாமுவேல் 28:7-19** முழுவதுமாக வாசிக்கவும்.

இப்பகுதியில் இஸ்ரயேலின் இராஜாவாகிய சவுல், பெலிஸ்தரின் மீதான தம்முடைய போரில் வெற்றியா அல்லது தோல்வியா என அறிய "எந்தோர்" எனும் இடத்தில் உள்ள அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயிடம் சென்று, இறந்துபோன சாமுவேல் தீர்க்கதரிசியை அவள்மூலம் வரவழைத்து, தன்நிலையைப்பற்றி அறிய முற்படுகிறார்.

இதனை **1சாமு 28:8** -ல் காண்கிறோம்.

**சவுல் வேஷம்மாறி, வேறு வஸ்திரம் தரித்துக்கொண்டு..”**




ஆம். சவுலின் உயரமும் அவருடைய சரீரத்தோற்றமும் இஸ்ரயேல் மத்தியில் பிரபலமானதினால் அவர் வேஷம்மாறி அங்கு சென்றார்(1சாமு 10:23). ஆனால் அந்த ஸ்திரீ ஏற்கனவே சவுல்இராஜா இஸ்ரயேல்தேசம் முழுவதும் அஞ்சனம் பார்க்கிறவர்கள் இருக்கக்கூடாது எனப்போட்டிருந்த கண்டிப்பான கட்டளையை நினைவுபடுத்துகிறாள். ஏன் இராஜாவாகிய சவுல் இக்கட்டளையை முன்னர் பிறப்பித்திருந்தார்? என்ற கேள்வி எழுகிறது. இதை உபாகமத்தில் வாசிக்கையில்,

**உபாகமம் 18:9-12ல்,"தன் மகனையாவது, தன் மகளையாவது தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும் ...தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுகிறார்”**





அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய பார்வையில் அருவருப்பானவர்கள் என்பதையும் நாம் காண்கிறோம். சவுலும்கூட தேவனுடைய இக்கட்டளைகளை சட்டமாக்கியிருந்தார். இவ்வாறிருக்க சவுல் அஞ்சனக்காரியிடம் செல்வதற்கான காரணம் என்ன? இதற்கான பதிலை சாமுவேலின் புத்தகத்தில் வாசிக்கிறோம்.

**1சாமுவேல் 16:14ல்,"கர்த்தருடைய ஆவி சவுலைவிட்டு நீங்கினார். கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாதஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது”**

ஏனெனில் தேவனுடைய கட்டளையை சவுல் மீறியிருந்ததால் தேவனுடைய ஆவி அவனைவிட்டு நீங்கியிருந்தது(1சாமுவேல் 15:1-11) அதுமாத்திரமல்ல சாமுவேல் தீர்க்கதரிசியும்கூட அதற்குப்பின்பு சவுலிடம் பேசுவதை நிறுத்தினார் எனப் பார்க்கிறோம்.

தேவன் கைவிட்ட இந்தவொரு பின்னணியில், தெளிந்தபுத்தியை இழந்தவனாய் சவுல் அந்த ஸ்திரீயிடம் குறிகேட்கச் செல்கிறார். சென்று அவளுடைய உயிருக்கு எல்லா உத்தரவாதமும் தந்து, குறிசொல்லும்படி கேட்கிறார்;

**1சாமு 28:10,11 - “அப்பொழுது சவுல், இந்தக்காரியத்திற்காக உனக்குப் பொல்லாப்பு வராது என்பதை கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று அவளுக்குக் கர்த்தர்மேல் ஆணையிட்டாள். அப்பொழுது அந்த ஸ்திரீ, உமக்கு நான் யாரை எழும்பிவரப்பண்ணவேண்டும் என்றதற்கு, அவன், சாமுயேலை எழும்பிவரப்பண்ணவேண்டும் என்றான்”**

பின்பு நடந்ததைக் குறித்து 1சாமுயேல் 28:12 ல் வாசிக்கிறோம்

**"அந்த ஸ்திரீ சாமுயேலைக்கண்ட மாத்திரத்தில் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, சவுலைநோக்கி, ஏன் என்னை மோசம்போக்கினீர்? நீர்தான் சவுலாச்சுதே என்றாள்"**

அந்த ஸ்திரீ சாமுவேலைக் கண்டமாத்திரத்தில் மாறுவேடத்தில் வந்த சவுலை எப்படி கண்டுபிடித்தாள்? இது மிக சுலபமான காரியம். சாமுவேல் சவுலைக் கண்டமாத்திரத்தில் "வணக்கம் சவுல்இராஜாவே" என்று வாழ்த்தியிருக்கவேண்டும். அதைவைத்து வந்தவர் சவுல் எனக் கண்டுபிடித்திருக்கக்கூடும். தொடர்ந்து வாசிக்கையில்,

**1சாமு 28:13,14 - "ராஜா அவளைப் பார்த்து, நீ பயப்படாதே, நீ காண்கிறது என்ன? என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ, தேவர்கள் பூமியிலிருந்து ஏறிவருகிறதைக் காண்கிறேன் என்று சவுலுக்குச் சொன்னாள்.அவருடைய ரூபம் என்ன என்று அவளைக்கேட்டான். அதற்கு அவள், சால்வையை போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பிவருகிறான் என்றாள். அதினாலே சவுல் அவன் சாமுவேல் என்று அறிந்துகொண்டு, தரைமட்டும் முகங்குனிந்து வணங்கினான்"**

சவுல்இராஜா அவளைப்பார்த்து, "நீ காண்கிறது என்ன" எனும்போது, இங்கு அந்த அஞ்சனம் பார்க்கிற ஸ்திரீக்குத் தான் காரியங்கள் தெரிகிறதே தவிர, சவுலுக்கு ஒன்றும் தெரிவதில்லை என்பதை முக்கியமாக கருத்திற்கொள்ளவேண்டும். மேலும்,"சால்வையை போர்த்தியிருக்கிற ஒரு முதிர்வயதான மனுஷன் எழும்பிவருகிறான்" என்கிறாள். அதைவைத்து பூமிக்குள்ளிருந்து ஏறி வருகிறவர் சாமுயேல் என்று அறிந்துகொண்டார். ஆம். அன்றைய காலங்களில் சால்வையானது தீர்க்கதரிசிகளுக்கு ஒரு அடையாளமாக இருந்தது. உதாரணமாக - எலியாவின் சால்வையை நாம் நினைவில் கொள்ளலாம். ஆனால் இங்கு ஒரு முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும். என்னவெனில், குறிசொல்லுபவர்கள்,அஞ்சனம் பார்க்கிறவர்கள், நாள் பார்க்கிறவர்கள், மந்திரவாதிகள் போன்றோர் சாத்தானுடைய தூண்டுதலின்பேரில் நடக்கும் ஜனங்கள் என்பதை நாம் கண்டிப்பாக ஒத்துக்கொள்ளவேண்டும். இக்காலங்களில்கூட இம்மக்கள் உள்ளனரே. இவ்வாறிருக்க சாத்தானுடைய கட்டுப்பாட்டின் கீழிருக்கிற அஞ்சனக்காரி எவ்வாறு இஸ்ரயேலின் மிகப்பெரிய சர்வவல்ல தேவனுடைய தீர்க்கதரிசியை கொண்டுவரமுடியும்? என்பதை யோசிக்கவேண்டும் அன்பானவர்களே.

**1சாமுயேல் 28:15ல்,"சாமுயேல் சவுலை நோக்கி," நீ என்னை எழும்பிவரப்பண்ணி என்னைக் கலைத்தது என்ன என்று கேட்டான். அதற்கு சவுல், நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன். பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறார்கள். தேவனும் என்னைக் கைவிட்டார், அவர் தீர்க்கதரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை.ஆகையால் நான்செய்யவேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு உம்மை அழைப்பித்தோம் என்றான்"**

இங்கு சாமுயேல் அந்த அஞ்சனக்காரியின் மூலம் சவுல்இராஜாவிடம் பேச ஆரம்பித்தார். அவர்

இராஜாவாகிய சவுல் தேவனுக்கு விரோதமாக செய்த அனைத்து கீழ்ப்படியாமையின் செய்கைகளையும் அறிவித்தார். பின்பு சவுல் பெலிஸ்தருக்கு முன்பாக தன்னுடைய நிலைமையை அறிய முற்படுகிறார்.
வசனம்16-19ல்,

**கர்த்தரே உன்னைவிட்டு விலகியிருக்கும்போது நீ என்னிடத்தில் கேட்பானேன்?**

என்றுகூறியபின், சவுலின் எதிர்காலத்தைக்குறித்து சாமுயேல் உடனடியாக ஒரு தீர்க்கதரிசனத்தைக் கூறுகிறார்:

**வசனம் 19 - "நாளைக்கு நீயும் உன் பிள்ளைகளும் என்னோடிருப்பீர்கள் "**

என்று சாமுயேல் கூறுகிறார்(மரிப்பீர்கள்) இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறினதா? பெலிஸ்தியர்களுடன் நடந்த யுத்தத்தின்மூலம் நிறைவேறினதாக 1சாமு 31:1-3இல் இச்சம்பவம் கூறப்பட்டுள்ளது,"

**"பெலிஸ்தர் இஸ்ரயேலரோடே யுத்தம் பண்ணினார்கள். இஸ்ரயேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித் தொடர்ந்து சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூகாவையும் வெட்டிப்போட்டார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது. வில்வீரர் அவனைக்கண்டு நெருங்கினார்கள். அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு..."**

சவுலும். இஸ்ரயேலரும் பெலிஸ்தியருடன் யுத்தத்திற்குச்சென்று, இஸ்ரயேலர் தோற்றுப்போய் பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கித்தொடர்ந்து, சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசூகாவையும் வெட்டிப்போட்டார்கள். மேற்சொன்ன தீர்க்கதரிசனம் இவ்வசனப்பகுதியின் மூலம் நிறைவேறியதுபோலத் தோன்றினாலும், **2சாமுயேல் 2:8**ல், சவுலின் இன்னொரு மகனாகிய இஸ்போசேத்தை இராஜாவாக்கினார். இவர் அநேக நாட்களுக்குப் பின்னரே மரித்தார் என **2சாமுயேல் 1:8**ல் வாசிக்கிறோம்.

ஆக சர்வ வல்ல தேவனுடைய தீர்க்கதரிசியாகிய சாமுயேல் ஒரு தீர்க்கதரிசனம் கூறினால் 100 சதவீதம் நிறைவேறுமல்லவா? ஆனால் 80 அல்லது 90 சதவீதம் மாத்திரம் நிறைவேறுமா? என யோசித்தால் நிச்சயமாக இல்லை. ஆக அஞ்சனக்காரியின் (சாத்தானின் ஆள்)முன்வந்து, நடித்து, பேசினது தீர்க்கதரிசியா? என்றால் பொய்யின் பிதாவாகிய சாத்தானே! அல்லது அவனுடைய தூதரே! ஏனெனில், ஏதேனில் சொன்ன அந்தப் பொய் **"சாகவே சாவதில்லை"(ஆதியாகமம் 3:4)** ஊர்ஜிதப்படுத்தவே இம்முயற்சியாகும். மேலும் சாத்தான் தன் மிகுதியான ஞானத்தினால், தேவன் சவுலைவிட்டு விலகினதால் கண்டிப்பாக அவன் மரித்துவிடுவான் என எதிர்காலத்தில் நடக்கப்போவதை முன்கூட்டியே யூகித்துவிட்டான். அதையே தீர்க்கதரிசனமாகக் கூறிவிட்டான்.ஆனாலும் சவுலின் வாழ்க்கையில் 100சதவீதம் நிறைவேறுமளவு துல்லியமாக அமையவில்லை(மனிதர்கள்கூட அநேக விஷயங்களை யூகிக்கிறோம்).

அவனுடைய வஞ்சகங்களும் யூகங்களும் தோல்வியடைவதன்மூலம் அவனுடைய

வேலைகள் வெளியரங்கமாகிறது. இப்படி ஆயிரக்கணக்கான வருடங்களாக சாத்தான் மக்களை அஞ்சனம் பார்க்கிறவர்கள் மூலமாகவும், குறிசொல்லுகிறவர்கள் மூலமாகவும் வஞ்சித்துவருகிறான். மேலும் எதிர்காலத்தைக்குறித்து தீர்க்கதரிசனம் கூறும் வல்லமை இருப்பதாக சொல்லிக்கொண்டு இருக்கிறான். ஆனால் எதிர்காலத்தைப்பற்றி கணித்துச்சொல்லும் காரியங்கள் முழுவதும் நம்பக்கூடியதாக இருக்காது. ஏனெனில், தேவன் ஒருவரே நம் எதிர்காலத்தை அறிந்தவர். ஆகவே சாத்தான் சாமுயேலைப்போன்று வேடமிட்டு இராஜாவாகிய சவுலை வஞ்சித்தான்.

ஆனால் தேவவசனம் முன்னுக்குப்பின் முரணானது அல்ல. மனிதர் மரித்தவுடன் ஒன்றும் அறியார்கள். உயிர்த்தெழுதல்வரை அவர்கள் மரண நிலைமையிலேயே இருப்பர் என கடந்தபாடத்தில் பார்த்தோம்.

இப்போது மரித்தவர் மீண்டும் வந்ததுபோல் உள்ள இன்னொரு வசனப்பகுதியை ஆராய்வோம்.

## 2.இயேசு மறுரூபமாகுதல்

**மத்தேயு 17:1-3 -"ஆறுநாளைக்குப்பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவர் முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்"**



இங்கு கர்த்தராகிய இயேசு மறுரூபமடைந்து எலியாவோடும் மோசேயோடும் பேசுகிறவராக தம்முடைய சீஷருக்கு காட்சியளித்தார். இது என்ன? எலியா மற்றும் மோசேயின் ஆத்துமா மரித்தபிறகு மீண்டும் காணப்பட்டதா?என்றால் மத்தேயு 17:9ல் இயேசுவின் வார்த்தைகள்மூலம் இந்நிகழ்ச்சியைப் பற்றின உண்மையை கண்டுபிடித்துவிடலாம்.

**மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்**

**"இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம்"** என்ற இந்த வார்த்தைகள் நமக்குத் திறவுகோலாக உள்ளது. வேதத்தில் வெளிப்படுத்தல் மற்றும் அப்.பவுலுக்கு தேவன் காண்பித்த அநேக தரிசனங்கள் போன்ற தரிசனமே(படம்) இதுவுமாகும்(உதாரணம்- **2கொரிந்தியர் 12:1-4, அப்போஸ்தலர் 10:10-16**). ஆக தரிசனம் என்பது உண்மை சம்பவமல்ல. மாறாக நாம் கண்களால் பார்க்கக்கூடிய காட்சியாகும். நாமும்கூட இன்று அநேக தரிசனங்களைக் காண்கிறோமே. ஒவ்வொரு வீடுகளிலும் தொலைக்காட்சி(Television)உள்ளதே. அதாவது தூர தரிசனம். அநேகர் நடப்பதுபோலவும் பேசுவதுபோலவும் நடனமாடுவதுபோலவும்

காண்பிக்கப்படுகிறதே. அதுபோல மறுரூபமலையில் காண்பிக்கப்பட்டது.

எவ்வாறெனில், மோசே மற்றும் எலியாவின் பிம்பங்கள் காண்பிக்கப்பட்டதே தவிர உண்மையான உடலுடையவர்களாக அல்ல. எவ்வாறு சீஷர்கள் அவர்களை மோசே என்றும் எலியா என்றும் கண்டுகொண்டார்கள் என்றால் வசனம் 3ல் அவர்கள் இயேசுவோடு பேசுகிறவர்களாக காணப்பட்டார்கள். அப்போது ஒருவரையொருவர் பேர்சொல்லி அழைத்திருப்பார்கள். அதைவைத்தே அவர்கள் மோசே என்றும் எலியா என்றும் கண்டுபிடித்திருப்பார்கள்.

ஆக, இங்கு காண்பிக்கப்பட்ட தரிசனத்தின் பொருள் என்ன? இராஜாதி இராஜாவாகிய இயேசு தமது இராஜ்யத்தில் மகிமையோடும் சகல அதிகாரங்களோடும் வரும்போது, ஸ்தாபிக்கப்பட இருக்கும் தேவனுடைய இராஜ்யத்தின் இரு பாகங்களைக் குறிக்கும் காட்சியாகும். மோசே கண்ணுக்குத் தெரிகிற ஆளுகையின் மாம்சத்துக்குரிய பாகத்தைக்குறிக்கிறார். அந்த தேவராஜ்ஜியத்தில் முற்பிதாக்கள் அல்லது இயேசுவுக்கு முன் வாழ்ந்த தேவனுடைய விசுவாசிகள் மாம்சத்திற்குரிய மகிமையில் ஆளுகை புரிவோராக இருப்பார்கள். அதேசமயம் "எலியா" - கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய பாகத்தைக் குறிக்கிறார். இவர்கள் கிறிஸ்துவுக்குப் பின்வாழ்ந்த விசுவாசிகளாகிய உண்மையான சபை வகுப்பார் - ஆவிக்குரிய மகிமையில் ஆளுகை செய்பவர்களாக இருப்பார்கள். இயேசு இவர்கள் இருவருடனும் இணைந்து ஆளுகை செய்வார் என்பதையே ...**"அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்"** என்கிறது. ஆம். இது வரவிருக்கின்ற இயேசு மற்றும் அவருடைய இராஜ்யத்தின் மகிமை பற்றின காட்சியாகும். ஆக, இந்த மறுரூபக் காட்சியிலும் மனிதன் மரித்தவுடன் உயிர் அடைவதில்லை என்பது நிரூபணமாகிறது. அடுத்து மூன்றாவது பகுதியைக் காணலாம்.

## 3. சிலுவையில் இயேசு நல்ல கள்ளனுக்கு வாக்களித்தல்

**லூக்கா 23:43ல், "இயேசு கள்ளனிடம் இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்"**



இவ்வார்த்தையானது ஒவ்வொரு புனித வெள்ளியன்றும் மனந்திரும்பின கள்ளனை இயேசு மன்னித்து அன்றே பரலோகம் அனுப்பிவிட்டார் என ஏறத்தாழ எல்லாக் கிறிஸ்தவர்களும் நம்பிவிடும்படி போதிக்கப்படுகின்றனர். இது சத்தியமா? நாம் பார்ப்போம்.

**லூக்கா 23:42ல், கள்ளனுடைய வேண்டுகோளை கவனிக்கவேண்டும். "ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்"**

இங்கு கள்ளனுடைய வேண்டுகோள் யாதெனில், கர்த்தருடைய இராஜ்யத்தில் இடம்பெறவேண்டும்

என்பதே. மாறாக பரலோகம் செல்லவேண்டும் என்பதல்ல. ஏனெனில், அப்போஸ்தலரான சீஷர்களே கர்த்தரிடம் பரலோகம் அழைத்துச் செல்ல கேட்காதபோது, அல்லது அதுபற்றித் தெரியாதபோது(பரிசுத்தஆவி பெறுவதற்கு முன்), கள்ளன் எவ்வாறு பரலோகம் பற்றி தெரிந்து கேட்கமுடியும்?

சீஷர்களுடைய நோக்கம் பரலோகம் செல்லவேண்டும் என்பதல்ல. வசனம் கூறுகிறது ;

**அப்போஸ்தலர் 1:6 - "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரயேலருக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்"**

ஆம். அவர்கள் பூமிக்குரிய ராஜ்யத்தில் உலகில் உள்ள சகல நாடுகளிலும் இஸ்ரயேல் உயர்த்தப்பட்டிருக்கும்போது, அந்த இராஜ்யத்தில் தங்களுக்கென பங்கை எதிர்பார்த்திருந்தனர். பூமிக்குரிய ஆளுகையில் தங்கள் பங்கை எதிர்பார்த்து, அதற்காக வாக்குவாதமும் பண்ணினர்.

**லூக் 22:24 - "அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று"**

ஆம். அப்போஸ்தலர்களுக்கு பரலோகத்தைப்பற்றியோ அல்லது அவைகளுடைய ஆசீர்வாதங்களைப்பற்றியோ பெந்தகோஸ்தே நாளில் பரிசுத்தஆவியின் அபிஷேகம் பெறும்வரை ஒன்றும் அறியாதவர்களாக இருந்தார்கள். இயேசுவின் சீஷர்களே இந்த சிந்தனையில் இருக்கும்போது, கள்ளன் இயேசுவை ஆண்டவர் என்று அறிவது எப்படி?

அது மாத்திரமல்ல, கள்ளன் "ஆண்டவரே" என்று இயேசுவை அழைத்ததாக தமிழ் வேதாகமத்தில் உள்ளதை, ஆங்கிலம் NIVபைபிளில் வாசித்தால், "இயேசுவே" என்றே வருவதை கவனிக்கவும். ஆக இங்கு நடந்ததுதான் என்ன?

**மத்தேயு 27:44**ல், சிலுவையில் கள்ளர்கள் மத்தியில் அறையப்படும் முன், இரு கள்ளவர்களுமே கர்த்தரை நிந்தித்தார்கள் என வாசிக்கிறோம். இதை நாம் **மாற்கு 15:32**இலும் வாசிக்கிறோம்). ஆனால் முந்தின இரவு முழுவதும், இயேசுவுடனே இவர்களும் இருக்கும்போது, அவருடைய சுபாவத்தை ஒரு கள்ளன் மாத்திரம் , இவர் குற்றவாளியல்ல என்று உணர்ந்து கொள்கிறான். இதைக்குறித்து **லூக்கா 23:40,41ல் வாசிக்கையில்,**

**"மற்றவன் அவனைநோக்கி, நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி கண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு.."**

மேலும் யோவான் பிலாத்துவின் கேள்விகளுக்கு கர்த்தர் விடையளிக்கும்போது,

**யோவான் 18:36,37 - "இயேசு பிரதியுத்தரமாக, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல. என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே, இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். அப்பொழுது பிலாத்து அவரைநோக்கி, அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக- நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான். சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த**




**உலகத்தில் வந்தேன். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்"**

பின்னர் சிலுவையில் அவருடைய தலைக்குமேல் **"நசரேயனாகிய இயேசு யூதர்களுடைய இராஜா"(INRI-Isus Nazarainus Rex Idurum)"** என்று கிரேக்கு, லத்தீன் மற்றும் எபிரேயு பாஷைகளில் எழுதப்பட்டிருந்ததை படிக்கும்போது (லூக்கா 23:28, யோவான் 19:19), இவர் ஒருஇராஜாவாக இருக்கலாம் என நினைத்து அவருடைய இராஜ்யத்தில் தன்னை நினைக்கும்படி வேண்டுகிறான். ஆனால் இயேசுவின் இராஜ்யம் அப்போதே வந்ததா? இயேசு மரித்த அன்று எங்கு இருந்தார்? அப்போஸ்தலர் 2:31இல், அவர் மூன்று நாள் கல்லறையில் இருந்ததாகப் பார்க்கிறோம்.

அது மாத்திரமல்ல, மீண்டும் 40 நாட்கள் தம்முடைய சீஷர்களுக்கு அநேகமுறை தரிசனமாகி, பின்பு 40 நாட்கள் கழித்துத்தான் கர்த்தரே பரலோகம் சென்றார்(அப்போஸ்தலர் 1:3). உயிர்த்தெழுந்தவர்களில் முதற்பலன் கிறிஸ்துவே என 1கொரிந்தியர்15:20ல் வாசிக்கிறோம்.

அவ்வாறிருக்க, இயேசு பரலோகம் செல்லும்முன்பே கள்ளன் பரலோகம் செல்லமுடியுமா? யோசிக்கவேண்டும் அன்பானவர்களே. அது மட்டுமல்ல, இயேசுவோடுகூட சேர வேண்டுமெனில்,

**மத்தேயு 16:24 மற்றும் 2தீமோத்தேயு 2:12ல், "அவரோடுகூட பாடுபட்டால் அவரோடு ஆளுகையும் செய்வோம்"**

தவிர, ஒரேவார்த்தையின்மூலம் பரலோகம் செல்லமுடியுமானால் கர்த்தர் பாரபட்சமுடையவர் என்று ஆகிவிடுமே. ஆகவே **லூக்கா 23:43**ல், "இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று கூறியதன் அர்த்தம் என்ன?

வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் பிரிவுக்குறி(Comma), கேள்விக்குறி(?) மற்றும் ஆச்சரியக்குறி(!) போன்றவை பழமையான கைப்பிரதிகளில் பயன்படுத்தப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மேலும் பல நூற்றாண்டுகளாக வேதாகமமானது அதிகாரம் மற்றும் வசனம் வாரியாக பிரிக்கப்படாதிருந்தது. கிபி 1236ம் ஆண்டில் கார்டினல் யூகோ என்பவரால் வேதாகமம் அதிகாரங்களாக பிரிக்கப்பட்டு, பின் கிபி 1355ம் ஆண்டில் ராபி நாத்தான் என்பவரால் வசனங்களாக பகுக்கப்பட்டு, ஸ்டீவன்சன் என்பவரால் ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்டது. ஒரு பிரிவுக்குறி (Comma)இவ்வசனத்தில் வேறு இடத்தில் இட்டதினால் இதன் அர்த்தமே வேதத்தில் மாபெரும் சத்தியத்திற்கு விரோதமானதாக ஆகிவிட்டது. எப்படியிருக்கவேண்டுமெனில்,

**"இன்றைக்கு நான் உனக்கு மெய்யாகவே சொல்லுகிறேன், நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்"**

**VERILY I SAY UNTO THEE TODAY, THOU SHALT BE WITH ME IN PARADISE**

(Rotherham Translation)

இங்கு கர்த்தர் அவருடைய இராஜ்யம் வரும்போது , கள்ளன் வேண்டிக்கொண்ட ஆசீர்வாதத்தைத் தருவதாக அன்றைய தினம் உறுதியளித்ததை பொருள்படுத்துகிறது. மாறாக அந்த ஆசீர்வாதத்தை அன்றைய தினமே பெற்றதாக பொருள்கொள்ளக்கூடாது.
மேலும் இதனை விளக்குவதற்கு, ஒரு ஆங்கில உதாரணத்தைக் காணலாம்.

1.KILL HIM NOT, SPARE HIM


2.KILL HIM, NOT SPARE HIM

மேற்சொல்லப்பட்ட வாக்கியத்தில் பிரிவுக்குறி அல்லது கமா இடம் மாறும்போது, அதின் அர்த்தம் முழுமையாக மாறி எதிர்மாறான பொருளைத் தருகிறது.

ஆக, கள்ளன் உயிர்த்தெழுதலின் நாள் வருமட்டும் கல்லறையில் மரித்த நிலையில் இருக்கவேண்டும். பின் இராஜ்யத்தில் இயேசுவின் கீழ் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் கால்கள் முடங்கும்போது , இந்த கள்ளன் கண்டிப்பாக கௌரவிக்கப்படுவான். எவ்வாறெனில், சிலுவையில் கர்த்தர் கள்ளனுடனும் மற்றவர்களுடனும் பேசின விதத்தை இவனிடம் கேட்டு மக்கள் தெரிந்து கொள்வார்கள். ஆகவே நிச்சயமாக. அந்தக் கள்ளன் அவருடைய மகிமையுள்ள ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும்போது நினைக்கப்படுவான்.

நாலாவது பகுதியை வாசிக்கையில்,

## 4. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம்...?




**1தெசலோனிக்கேயர் 5:23 - "உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் , நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக"**

இவ்வசனத்தின்பொருள் என்ன? ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஆத்துமா, ஆவி, சரீரம் என்று உள்ளதாக தோற்றமளிக்கிறது அல்லவா? இவ்வசனம் இப்படியா பொருள்தருகிறது? இந்த வசனம் , தெசலோனிக்கேய சபையில் இருந்த அநேகருக்கு எழுதப்பட்டிருப்பதை தயவுசெய்து கவனிக்கவேண்டும் .

**1தெச 1:1 - பவுலும், சில்வானும், தீமோத்தேயும் பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேய சபைக்கு எழுதுகிறதாவது.."**

இது தனிப்பட்ட நபருக்கு எழுதப்படாமல், ஒட்டுமொத்த சபைக்கும் எழுதப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. அநேக அங்கத்தினர்களையுடைய சபையானது ஒரே ஆவி, ஒரே ஆத்துமா, ஒரே சரீரம் பெற்றிருப்பதாக சொல்லுவது எப்படி? இதைக்குறித்து வாசிக்கையில்,

**எபேசியர் 4:4 - உங்களுக்கு உண்டான ஒரே அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு"**

ஆம். சபையானது ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உடையதாய் இருக்கிறது. இதைக்குறித்து வாசிக்கையில்

**அப்போஸ்தலர்4:32-"விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்கு பொதுவாயிருந்தது"**

ஆம். சபையானது உயிருள்ள சரீரமாக ஒரே ஆத்துமாவாக இருக்கிறது. ஆகவே அப்.பவுல் தெசலோனிக்கேயாவில் உள்ள பட்டணத்திற்கு கடிதம் எழுதும்போது. இந்தக் கருத்தை மனதில்வைத்துக்கொண்டே எழுதியிருக்கவேண்டும்.

மனித ஆத்துமா குறித்து வேறு சில சந்தேகத்துக்குரிய வசனங்களை தியானிக்கலாம்.

**சங்கீதம் 103:1-2 - "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி. என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி.."**

இந்த வார்த்தைகள் ஜெபத்தின் முடிவில் தேவனுக்குத் துதியாக ஏறெடுக்கப்படும் பிரபலமான வார்த்தைகளாகும். இந்த வசனம் கவிதை நடையில் எழுதப்பட்டிருக்கிறது. கவிதை நடையில் ஒருவர் தன்னைப்பற்றி எழுதும்போது, மூன்றாவது நபராக கருதி எழுதுவது இயற்கையே. (இதுபோன்றே சங்கீதம் 139:14மற்றும் 103:1,2இலும் கூறப்பட்டுள்ளது)

**லூக்கா 2:35 - "உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்"**

இங்கு சீமோன் மரியாளைப்பார்த்து, அவளுடைய குமாரனாகிய இயேசுவின் நிமித்தம் படப்போகிற வேதனைகளைக் குறித்து தீர்க்கதரிசனமாக சொன்ன வசனமாகும். இது அடையாளமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, "என் முதுகில் குத்தினான்" என்று நம்பிக்கைக்குரியவர் துரோகம் செய்ததைக் குறிப்பிடுகிறோம் அல்லவா.

ஆகவே மரித்தாலும் உயிர்த்தெழுதலின் நாள் வரும் முன் உயிரடையமுடியாது என்பது வேதத்தில் மரித்தவர்களின் நிலைமை பற்றிய தெளிவான சத்தியமாகும்.

**தேவன் தாமே அவர் சத்தத்தைக் கேட்கவும், அவர் சத்தியத்திற்குக் கீழ்ப்படியவும் உங்களுக்கு உதவி செய்வாராக. ஆமென்**